# வேளாண்மை அறிவியல் நிலையம்,

# விருத்தாசலம், கடலூர் மாவட்டம்



**உளுந்து கோ 6 - “பயறு வொண்டரின் மகத்துவும்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பெயர் | : | திரு.ப. வேல்முருகன் |  |
| 2. | தந்தையின் பெயர் | : | திரு.பச்சமுத்து | |
| 3. | பாலினம் | : | ஆண் | |
| 4. | முகவரி | : | தொரவளூர்<br>கடலூர் மாவட்டம் | |
| 5. | தொலைப்பேசி எண், மின் அஞ்சல் விவரம் | : | 94862 25594 | |
| 6. | நிலம், நீர் சொத்து விவரங்கள் | : | நன்செய்-25 ஏக்கர் | |
| 7. | செயல்படுத்திய தொழில்நுட்ப பகிர்மானம் | : | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து உளுந்து கோ 6 விதை மற்றும் பயறு வொண்டர் ஆகியன எமது விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பெற்று தரப்பட்டது. கோ 6 இரகத்தை இறவையில் (புரட்டாசி பட்டம்) பயிரிடப்பட்டு அதற்கு பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச்சத்துக்களான தழை, மணி, சாம்பல் சத்து 25 : 50 : 25 கிலோ/ எக்டர் ஊட்டச்சத்துகளை அடியுரமாக இடப்பட்டது. விதைத்த 40வது நாளில் அதாவது பயிர்ப்பூக்கும் தருணத்தில் பயறு வொண்டரை ஏக்கருக்கு 2¼ கிலோ 200 லிட்டர் தண்ணீரில் தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் சேர்த்து பயிர்களின் மேல் தெளிக்கப்பட்டது. அடுத்த ஐந்து, இருபதாவது நாளில் NAA 40 பிபிஎம் / லிட்டர் தெளிக்கப்பட்டது. மேலும் தகுந்த பரிந்துரைக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு முறைகளும் பின்பற்றப்பட்டன. | |
| 8 | விளைவு | : | உளுந்து கோ 6 றில் பயறு வொண்டரை தெளித்ததன் விளைவாக ஏக்கருக்கு 600 கிலோ மகசூல் அவருக்கு கிடைத்தது மற்றும் 65 நாளில் ஏக்கருக்கு ரூபாய் 24,000 கிடைத்தது. | |
| 9. | விவசாயிடம் கற்று கொண்ட அனுபவங்கள் | : | இப்பயறு வொண்டரை எல்லா பயறு வகை பயிர்களுக்கும் எல்லா இரகத்திலும் தெளிக்கலாம்.<br>இப்பயறு வொண்டரை தெளிப்பதன் மூலம் மகசூலை கூட்டி அதிக இலாபம் பெறுவதன் மூலம் பயறுவகை பயிர்களின் உற்பத்தியையும் பெருக்கலாம். | |


ப. வேல்முருகன்
வயல் விழா
25.01.2011

***பூங்கொத்து தயாரித்தல்***

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பெயர் | : | *திருமதி. சு. உமா ராஜு* |  |
| 2. | தந்தையின் பெயர் | : | திரு. இராஜசேகர் | |
| 3. | பாலினம் | : | பெண் | |
| 4. | முகவரி | : | பாதிரிகுப்பம் அஞ்சல்,<br>அரிசிபெரியங்குப்பம் வழி,<br>கடலூர் - 607 002 | |
| 5. | தொலைப்பேசி எண், மின் அஞ்சல் விவரம் | : | 9965121620 | |
| 6. | நிலம், நீர் சொத்து விவரங்கள் | : | நன்செய்-10 ஏக்கர் | |
| 7. | செயல்படுத்திய தொழில்நுட்ப பகிர்மானம் | : | *கொய்மலர்கள், கொய்மலர்களைக் கொண்டு அலங்காரங்கள், பூங்கொத்து தயாரிக்கும் முறை பற்றிய அடிப்படை, கொய்மலர்களைக் பாதுகாத்தல் பயன்படுத்தும் முறை* | |
| 8 | விளைவு | : | *பயிற்சியின் விளைவாக கடலூர் மாவட்டத்தில், தற்பொழுது நான்கு நபர்கள் சுயமாக பூங்கொத்து தயாரித்து விற்பனை செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர். கடலூர் மாவட்டம் கூத்தபாக்கத்தில் பெடல்ஸ் (Petalz Bouquet Shop) என்ற பூங்கொத்து தயாரித்து கொடுக்கும் கடையை திருமதி. சு. உமா ராஜு (9965121620) மற்றும் பெண்ணாடத்தை சேர்ந்த திரு. கு. ஆண்டனி பிரதாப் (9150772832) ஆகிய இருவரும் சேர்ந்து கடந்த பத்து மாதங்களாக முறையாக நடத்தி வருகின்றனர். மங்கலம்பேட்டையைச் சேர்ந்த திரு. சு. கோவர்தனன் (9894954566) அவர்கள் நாமக்கல், திருச்சி, விழுப்புரம், நெய்வேலி மற்றும் விருத்தாசலம் போன்ற நகரங்களில் கொய்மலர்களை கொண்டு **300**க்கு மேற்பட்ட பூ மேடை அலங்காரங்களை ரூ. **6,000** யிலிருந்து ரூ.**1,00,000** வரை சுயமாக செய்து முடித்துள்ளார்.* | |
| 9. | விவசாயிடம் கற்று கொண்ட அனுபவங்கள் | : | *ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டு, தனியாக கடை அமைக்காமல் கொய்மலர் சாகுபடி செய்து வீட்டிலிலேயே பூங்கொத்து (Hand Bouquets) மற்றும் கூடை பூங்கொத்து (Basket bouquets) அலங்காரங்களை செய்து சிதம்பரம் முழுவதும் விற்பனை செய்து வருகிறார். கொய்மலர்களை கொண்டு பூங்கொத்து தயாரித்தல் தொழில் முனைவோரை உருவாக்குவதிலும், அவர்கள் விற்பனைக்கு உதவுதலிலும் , தொழிலை லாபம் அடைவதற்கும் இது தகுந்த தொழில்நுட்பம் என்பதை இவ்விவசாயி மூலம்* | |

| | | | |
|---|---|---|---|
| | | | யாவரும் உணரலாம். |



சு. உமா ராஜு

**கடலூர் மாவட்ட மதிப்பூட்டப்பட்ட உணவு பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் நல சங்கம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பெயர் | : | மொ. முஜ்பூர் ரஹ்மான் |  |
| 2. | தந்தையின் பெயர் | : | மொகமது பஸ்பான் | |
| 3. | பாலினம் | : | ஆண் | |
| 4. | முகவரி | : | 28c, மெயின் ரோடு,<br>மங்கலம்பேட்டை,<br>விருத்தாசலம் தாலுக்கா,<br>கடலூர் மாவட்டம். | |
| 5. | தொலைப்பேசி எண், மின் அஞ்சல் விவரம் | : | 9843782900 | |
| 6. | நிலம், நீர் சொத்து விவரங்கள் | : | நன்செய்-25 ஏக்கர் | |
| 7. | செயல்படுத்திய தொழில்நுட்ப பகிர்மானம் | : | வேளாண்மை அறிவியல் நிலைய பயிற்சியில் மதிப்பூட்டப்பட்ட உணவு பொருட்களான ஜாம், ஜெல்லி, ஜூஸ், ஸ்குவாஸ், கேண்டி, சத்துணவு மாவு, கேக், பிஸ்கட், மசாலா பொடி , பாலில் மதிப்பூட்டப்பட்ட உணவுகள் போன்ற பொருட்கள் தயார் செய்வது, அவற்றிற்கு லேபிள் தயார் செய்வது, அப்பொருட்களை சந்தைப்படுத்துவது போன்ற தொழில்நுட்பங்களை செய்முறை செய்யப்பட்டது. | |
| 8 | விளைவு | : | தற்போது இன்றைய மக்களின் உணவு முறையை கருத்தில் கொண்டும், மறைந்து வரும் விவசாய வகைகளான கம்பு, கேழ்வரகு, திணை, சாமை, சோளம், கொள்ளு ஆகியவற்றை கொண்டு நீரழிவு நோயாளிகள் மற்றும் இளைய தலைமுறையினர், குழந்தைகள் ஆகியோருக்கு தகுந்தாற்போல் மதுரை மனையியல் கல்லூாயில் பயிற்சி பெற்று, சத்துமாவு , புட்டு மாவு, அடை மாவு, போன்ற உணவு வகைகளை உற்பத்தி செய்து வருகிறோம்.<br>இந்த வகையான வியாபார உத்திகளை எங்கள் சங்க உறுப்பினர்களின் குறிப்பிட்ட பங்கு தொகையை மூலதனமாகக் கொண்டு, வேண்டிய அளவு இயந்திரங்களை வாங்கி அதன் மூலம் உற்பத்தி நேரத்தை குறைத்து செலவை குறைத்து மக்களுக்கு குறைந்த விலையில் வியாபாரம் செய்து வருகிறோம்.<br>இப்படி மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயார் செய்து விற்பனை செய்வது மூலமாக எங்கள் சங்க உறுப்பினர்களுக்கு மாத வருமானம் சராசரியாக ரூ.15,000 முதல் ரூ.20,000 வரை கிடைக்கிறது. | |
| 9. | விவசாயிடம் கற்று கொண்ட அனுபவங்கள் | : | இப்படி மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயார் செய்து விற்பனை செய்வது மூலமாக தனி மனிதனின் மாத வருமானம் சராசரியாக ரூ.15,000 முதல் ரூ.20,000 வரை கிடைக்கும். | |


Cuddalore District
VALUE ADDED FOOD PRODUCT PRODUCERS &
ENTERPRENEURS WELFARE ASSOCIATION
aero food products
Vriddhachalam
Cell:9360010207, 9786061025